Registered as a Newspaper
பக்கங்கள் 12 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 12
வெள்ளிக்கிழமை
08 டிசெம்பர் 2023

### முச்சந்தி முரளி



"அப்ப ரணில் சொன்ன மாதிரி எல்லாம் செய்வார் எண்டு சஜித் நினைச்சாரெண்டால் உண்மையிலையே அவரை மாதிரி அப்பாவி ஒருத்தருமில்லை"







# தீர்வு எங்கே?

## சஜித் நேற்று விளாசல்

**கொழும்பு, டிசெம்பர் 8**

**தேசிய இனப்பிரச்சினைக்கு இந்த வருடத்துக்குள் தீர்வு வழங்கப்படும் என்று கடந்தவருடம் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். ஆனால், இந்தவருடம் நிறைவடையவுள்ள நிலையில் அவ்வாறு எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை என்று ஜனாதிபதி ரணிலை விளாசியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்.**

11

# கூட்டமைப்புக்குள் ஐந்து கறுப்பாடுகள்!

## ரணிலுக்கு அவர்கள் ஆதரவாம்

கொழும்பு, டிசெ. 8

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி.க்களில் ஐவர் ஜனாதிபதியின் பக்கமே நிற்கின்றனர். தன்னைப் புலியென கூறிக்கொள்ளும் சாணக்கியன் சிங்களப் பெண்ணொருவரையே திருமணம் செய்யப் போகின்றார் - என்று இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'சாணக்கியன் சுதந்திரக் கட்சியில் இருந்தவர். மஹிந்த ராஜபக்சவிடம் அங்கத்துவம் வாங்கிக்கொண்டு மட்டக்களப்பில் போட்டியிட்டார். தன்னைப் புலியென

11

## கொடிகாமத்தில் –

# வன்முறைக்குழு அட்டூழியம்!

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்ப்பாணம், கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெள்ளாம்போக்கட்டிப் பகுதியில் வீதியால் சென்ற இளைஞர் ஒருவர் மீது வன்முறைக் குழுவொன்று சரமாரியாகத் தாக்குதல் நடத்தியதுடன், அந்த இளைஞரின் வீட்டுக்குள்ளும் அத்துமீறி நுழைந்து

11

# யாழ். சிறைச்சாலையில் பெண்கைதி துன்புறுத்தல்

## ம.உ.ஆணைக்குழுவில் உறவினர்கள் முறையீடு

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் பெண் கைதியொருவர் சிறைக்காவலர்களால் துன்புறுத்தப்படுகிறார் எனத் தெரிவித்து அந்தப் பெண்ணின் உறவினர்களால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இந்த முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பெண் கைதியை அவரது உற

11

# இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்!

யாழ்ப்பாணம், டிசெ. 8

யாழ்ப்பாணம் - நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் உத்தரவிட்டார். நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் இந்த மீனவர்கள் கைதாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-66)

# மாணவர் ஒன்றுகூடல்; வீதியில் கைகலப்பு!

வவுனியா, டிசெ. 8

வவுனியா நகரை அண்டிய பிரபல பாடசாலை ஒன்றின் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலின்போது பாடசாலைக்கு முன்பாக வீதியில் நின்றவர்களுடன் பாடசாலை மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர். இது தொடர்பான தகவல் வழங்கப்பட்டதையடுத்து விரைந்து வந்த பொலிஸார் நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஒன்றுகூடலுக்காக கார்கள் மற்றும் மோட்டார்

11

# பாலம் உடைந்து விபத்து இருவருக்குக் காயம்!

கிளிநொச்சி, டிசெ. 8

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பாலம் உடைந்து விழுந்து விபத்துக்குள்ளானதில், மோட்டார்சைக்கிளில் பயணித்த இருவர் காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 5 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

செபஸ்தியார் வீதி என அழைக்கப்படும் வீதியில் அமைக்கப்பட்டிருந்த பாலமே இவ்வாறு இடிந்து வீழ்ந்துள்ளது. 2019ஆம் ஆண்டு கரைச்சிப் பிரதேசசபையால் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் குறுகிய

11

# பலவீனமான அரசாங்கத்தால் 200,000 மீனவர்கள் பாதிப்பு!

## வடக்கு மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 8

ரணில் அரசாங்கத்தின் பாரபட்சமான செயற்பாடுகளால், வடக்கு மாகாணத்தில் உள்ள 50 ஆயிரம் மீனவக் குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மீனவர்கள் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில், யாழ் மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் முன்னாள் தலைவரும், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச செயலாளருமான அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்ததாவது:-

சமீபத்தில் நான்கு படகுகளுடன் இந்திய மீனவர்கள் 22 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடந்த வாரமும் 22 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், அவர்கள் அனைவரும் எவ்வித சட்டப்பொறி

11

# பலஸ்தீனத்துக்காக கொழும்பில் போர்!

கொழும்பு, டிசெ. 8

பலஸ்தீனத்தின் சுதந்திரத்தை வலியுறுத்தியும், காஸாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் கொழும்பில் சர்வமதகுருக்கள், பொது மக்கள் ஒன்றிணைந்து நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இஸ்ரேலுக்கும், அமெரிக்காவுக்கும் எதிரான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், டிசெ.8

2022 க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்த மாணவர்களை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 2025 க.பொ.த. உயர்தரத்தில் இணைத்துக் கொள்வதற்காக மாணவர்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விஞ்ஞானப் பிரிவில் கல்வியைத் தொடர வசதி வாய்ப்பற்ற மலையக, வன்னிப் பிரதேச மற்றும் கிழக்கு மாகாண மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு விடுதி வசதி மற்றும் ஏனைய பொருளாதார வசதிகளும் செய்து தரப்படும். விண்ணப்பங்களை மேற்கொள்ள வேண்டிய இறுதித் திகதி எதிர்வரும் 8ஆம் திகதியாகும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தின் ஊடாக விண்ணப்பங்களுக்கான இணைப்பைப் பெற்றுக் கொள்ளமுடியும். மேலதிக விபரங்களுக்கு 0212222431, 0702111764 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது. (ரி-66)

+++

யாழ்ப்பாணம், டிசெ.8

வடக்கு மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நடத்தப்படும் உடுவில் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான தையல் மனையியல் டிப்ளோமாப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறித்த பயிற்சியின் மூலம் என்.வி.கியூ. 4 தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பங்களை உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்திக் கிளையிலும், இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இயங்கிவரும் மகளிர் அபிவிருத்தி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்தப் பயிற்சிக்கு 18 வயது முதல் 35 வயது வரையான மகளிர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்களை எதிர்வரும் 22ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரின் 0779599022 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி-66)



# விதுர விக்கிரமவே முரணுக்குக் காரணி

### சாடுகின்றார் சாணக்கியன்

கொழும்பு, டிசெ.8

**புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்கிரம கடும் இனவாதி. தமிழர் மரபுரிமைகளை அழிப்பதையே நோக்கமாக கொண்டுள்ளார். தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தை பதவி விலக்கியதற்குப் பதிலாக ஜனாதிபதி இவரைப் பதவி விலக்கியிருக்கவேண்டும். ஆனால் ஜனாதிபதிக்குத் தைரியம் இல்லை.**

- இவ்வாறு தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

புத்தசாசனம் மற்றும் மத விவகாரங்கள் அமைச்சு மிக முக்கியமானது. முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசாங்கத்தில் இராஜாங்க அமைச்சராக இருந்த விதுர விக்கிரமநாயக்க வடக்கு மற்றும் கிழக்கில் இனவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார். பின்னர் இவர் புத்தசாசன அமைச்சராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

இவர் கடும் இனவாதி. மலைகளைக் கண்டால் அவரால் இருக்க முடியாது. அங்கு ஓடிச் செல்வார். வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலைக்கு ஓடி வந்தார். இனவாத முரண்பாடுகளைத் தோற்றுவித்தார். மட்டக்களப்பு மாவட்ட குசலான மலைக்கும் வந்தார்.

ஆனால் நாங்கள் அவரை அங்கு செல்லவிடவில்லை. ஒரு கிலோமீற்றர் தூரம் நடக்க வைத்து வழியனுப்பி வைத்தோம்.

ஜனாதிபதியுடன் பேசிப் பயனில்லை என்பதற்காக தற்போது சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம். இனவாதியான புத்தசாசன அமைச்சர் நீதிமன்றக் கட்டளைக்குப் புறம்பாக இராணுவத்துடன் வெடுக்குநாறிக்கு வந்தார். இவருக்கு எதிராக எதிர்காலத்தில் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்போம். இந்தக் கடும் இனவாதி அமைச்சரால்தான் நீதிபதி ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறினார். எதிர்காலத்தில் நிச்சயம் இதற்குப் பதிலளிக்கவேண்டும் - என்றார். (எ-இ)



## முப்படைகளின் தளபதிகளாக பெண்கள்

கொழும்பு, டிசெ.8

முப்படைகளின் தளபதிகளாகப் பெண்களை நியமிக்க உத்தேசித்துள்ளதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தற்போது ஒரேயொரு பெண் மட்டுமே இராணுவ மேஜர் தரத்தில் உள்ளார் என்றும், சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு முப்படைகளின் தளபதிகளாக பெண்களை நியமித்து தெற்காசியாவில் முன்மாதிரியாக திகழப்போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-6)

# ரஷ்யாவின் தாக்குதலில் இலங்கைச் சிப்பாய்கள் சாவு!

கொழும்பு, டிசெ.8

உக்ரைன் படையில் இணைந்து போரிட்ட இலங்கையின் முன்னாள் சிப்பாய்கள் மூவர் ரஷ்யா நடத்திய தாக்குதலில் உயிரிழந்துள்ளனர்.

போர் முனையில் உக்ரைன் படைப்பிரிவொன்றின் கட்டளைத் தளபதியாக செயற்பட்ட கப்டன் ரனிஷ் ஹேவகேயும் இதில் உள்ளடங்குகின்றார். 'கறுப்பு எதிரி' என ரஷ்யப் படைகளால் இலக்கு வைக்கப்பட்ட நபர்கள் பட்டியலில் கப்டன் ரனிஷின் பெயரும் இருந்துள்ளது எனத் தெரியவருகின்றது.

இலங்கை இராணுவத்தில் இருந்து சட்ட பூர்வமாக விலகிய இவர் கடந்த ஆண்டு மார்ச் மாதம் உக்ரைன் இராணுவத்தில் இணைந்துள்ளார். போர்க் களத்தில் சிறப்பாகச் செயற்பட்டதால் இவருக்கு உக்ரைன் ஜனாதிபதியால் விருதும் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் பிரியந்த என்ற சிப்பாய் உயிரிழந்துள்ளார். கடும் சமரால் அவரின் சடலத்தை உக்ரைன் படை எடுத்துச் செல்ல முன்வரவில்லை. எனினும், அவரின் சடலத்தை எடுத்துச்செல்ல கப்டன் ரனிஷ் ஹேவகே முன்வந்துள்ளார். அவருடன் மேலும் மூன்று இலங்கைச் சிப்பாய்கள் இணைந்துள்ளனர். எனினும், ரஷ்யா நடத்திய தாக்குதலில் ரனிஷ் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர். (ஒ-44)

## குற்றங்கள்

### வர்த்தகர்கள் கைது

கொழும்பு, டிசெ.8

மாத்தறை நீதிவான் நீதிமன்ற களஞ்சியசாலையில் திருடப்பட்டு வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட இரண்டு துப்பாக்கிகளுடன் மூன்று வர்த்தகர்கள் சந்தேகத்தின் பேரில் மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மாத்தறை, விஹாரஹேன பிரதேசங்களில் வைத்து மாத்தறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (எ-இ)

### இரட்டைச் சிசுக்களை விற்ற தாய் கைது!

கொழும்பு, டிசெ. 8

பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்த இளம் தாய் ஒருவர் தனது இரட்டைக் குழந்தைகளை விற்பனை செய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார். குழந்தைகளை வாங்கிய இரண்டு பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ராகம பொலிஸார் தெரிவித்தனர். ராகம பிரதேசத்தில் வீட்டு வேலை செய்து வந்த தாயொருவரே இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டாரென விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

### குத்திக் கொலை

கொழும்பு, டிசெ.8

சீதுவ லியனகேமுல்ல பிரதேசத்தில் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்தவர்கள் தாக்குதலை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். (எ-இ)

### இருவர் கைது

கொழும்பு, டிசெ.8

துப்பாக்கி மற்றும் தோட்டாக்களுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் துருக்கி, இஸ்தான்புல் செல்ல முயன்ற போதே கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

### மாணவன் மீது தாக்குதல்

கொழும்பு, டிசெ.8

ஜப்பானில் நடைபெறவுள்ள சர்வதேச ஜூடோ போட்டிக்காகச் செல்லவிருந்த கம்பளையில் உள்ள பிரபல பாடசாலையொன்றில் மாணவர் ஒருவர் இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். (எ-இ)

### வலம்புரிச் சங்கு விற்றவர் கைது!

கொழும்பு, டிசெ. 8

அரியவகை வலம்புரிச் சங்கை 3 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற குற்றச்சாட் டில் பதுளையில் ஒருவர் நுவரெலியா விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வலம்புரிச் சங்கைக் கொள்வனவு செய்பவர்கள் போன்று அதிரடிப் படையினர் மாறுவேடமிட்டுச் சென்று பேச்சு நடத்தியதில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விலை உயர்ந்தது

கொழும்பு, டிசெ. 8
கடந்த சில மாதங்களில் ஒரு குறிப்பிட்ட அளவில் விலை குறைந்திருந்த கார்களின் விலை மீண்டும் உயர்ந்துள்ளது.

வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி கிடைக்காமையே இந்த நிலைக்குக் காரணம் என வாகன வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலை தொடருமானால் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். (ச-இ)

## விலைமதிப்பற்ற இரத்தினக்கல்

கொழும்பு, டிசெ.8
அவிசாவளை பகுதியிலுள்ள சுரங்கமொன்றிலிருந்து விலைமதிப்பற்ற இரத்தினக் கல் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் நிறை 22 கிலோகிராம் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இரத்தினக்கல்லினுள்ளே நீர்க்குமிழிகள் காணப்படுவதால் இந்த இரத்தினக்கல் சிறப்பு வாய்ந்ததாகக் காணப்படுகிறது.

இந்த இரத்தினக் கல்லை சர்வதேச சந்தையில் விற்பனை செய்ய தேசிய இரத்தினக் கல் மற்றும் ஆபரண அதிகார சபையிடம் அதன் உரிமையாளர் வழங்கியுள்ளார். (ச-இ)

# ஒரு மாத நிலுவைக்கு இனி சிவப்புப் பட்டியல்!

கொழும்பு, டிசெ. 8

**ஒருமாத மின்சாரப் பாவனைக்குரிய கட்டணம் செலுத்தத் தவறின் இனி சிவப்புப் பட்டியல் வழங்கப்படும். சிவப்புப் பட்டியல் வழங்கப்பட்டு 10 நாள்கள் அவகாசம் வழங்கப்படும். இந்தக் காலப்பகுதியில் கட்டணம் செலுத்தத் தவறும்பட்சத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் என்று மின்சாரசபை அறிவித்துள்ளது.**

மின்சாரசபையால் அறிமுகப்படுத்தப்பட்ட ஈ-பில் முறையின்படி சிவப்பு கட்டணப் பட்டியல் வழங்குவது படிப்படியாகக் குறைவடைகிறது. மிக விரைவில் வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் நிலுவைத் தொகை அறிவிக்கப்படும் என்றும் சபை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

# மயானத்தில் தூண்கள் 'அபேஸ்' பூதவுடல் எரிப்பதில் நெருக்கடி

### மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 8
வட்டுக்கோட்டை வழுக்கையாறு இந்து மயானத்தில் பூதவுடல் எரிக்கும் இரும்புத் தூண்கள் இனந்தெரியாத விஷமிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு களவாடப்பட்டுள்ளன என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்து மயானத்தில் பூதவுடல் வைக்கும் இடத்தில் நடப்பட்டிருக்கும் இரும்புத் தூண்களே இரவோடு இரவாக கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இதனால் மயானத்தில் பூதவுடல் எரிப்பதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மயானத்தில் பொருத்தப்பட்டிருக்கும் மின்குமிழ்களும் கடந்த சில தினங்களுக்கு முன்பு திருடப்பட்டுள்ளன. எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

## வெரிட்டே ரிசேர்ச் முடிவை நிராகரித்தது இலங்கை!

ஊழியர் சேமலாப நிதியில் அரசாங்கம் தலையிடுவதை 77 சதவீத இலங்கை மக்கள் விரும்பவில்லை என்ற வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வறிக்கையை இலங்கை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

உள்நாட்டுக் கடன் சீரமைப்பின் கீழ் ஊழியர்களின் எதிர்கால வைப்பு நிதியில் தலையீடு செய்யும் அரசாங்கத்தின் தீர்மானத்தை 77 சதவீத மக்கள் விரும்பவில்லை என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இது முழு இலங்கை மக்களினதும் நிலைப்பாடாக அமையாது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். (எ-இ)

## ஜனாதிபதி ஆலோசகராக வடிவேல் சுரேஷ் நியமனம்

கொழும்பு, டிசெ. 8
ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மலையகத் தமிழர்களை இலங்கைச் சமூகத்துடன் முழுமையாக இணைத்துக்கொள்வது தொடர்பான ஜனாதிபயின் ஆலோசகராக வடிவேல் சுரேஷ் நியமிக்கப் பட்டார். (ச-இ)

# பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் கருத்திட்டம்

### நடைமுறைப்படுத்த அரசு தீர்மானம்

கொழும்பு, டிசெ.8
உலக வங்கியால் நிதியனுசரணை வழங்கப்படும் நிதித்துறையின் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தல் கருத்திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நிதித்துறையின் பாதுகாப்பு வலையமைப்பை வலுப்படுத்தும் கருத்திட்டம் உலக வங்கியின் நிதியனுசரணையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக கடந்த ஏப்ரல் மாதம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கொள்கை ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த அங்கீகாரத்தின்படி இடம்பெற்ற கடன் உடன்பாட்டுக் கலந்துரையாடல்களில் இலங்கை பணவைப்புக் காப்புறுதித் திட்டம் மூலதனமிடல், மத்திய வங்கியின் நிறுவன ரீதியான இயலளவு விருத்தி மற்றும் இந்தக் கருத்திட்ட அமுலாக்கலைக் கண்காணித்தல் போன்ற கூறுகளின் கீழ் 150 மில்லியன் டொலரை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

ஏற்புடைய ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

## புதினம் தெரியுமோ?

**நா**டு முழுக்க மருந்துக்குத் தட்டுப்பாடு எண்டு ஒரே கவலை. அதால இஞ்சையுள்ள ஆஸ்பத்திரியளிலையும் எல்லா மருந்தும் குடுக்கிறேலை. டாக்குத்தர்மார் நாலைஞ்சு மருந்துக்கு துண்டு எழுதிக் குடுத்தால், அங்கையுள்ள டிஸ்பென்சரியில ஒண்டு ரண்டு மருந்தை மட்டும் குடுத்திட்டு, 'மிச்சத்தை வெளியால உள்ள பார்மஸியளில காசு குடுத்து வாங்குங்கோ' எண்டு பக்குவமாச் சொல்லி அனுப்புகினம். சிலவேளையிலை முழு மருந்தையும் பார்மஸிலியையே வாங்கவேண்டியும் வருகுது.

ஆனால் பகிடி என்னெண்டால் அரசாங்க ஆஸ்பத்திரியளில இல்லாத மருந்தெல்லாம் பார்மஸியளிலையும், பிரைவேட் ஆஸ்பத்திரியளிலையும் தாராளமாக் கிடைக்குது. அரசாங்கத்தாலையே கொள்வனவு செய்யமுடியாத மருந்துகளை தனியார் தங்கட காசைப்போட்டு இறக்குமதி செய்யினம். ஆனால் சில தனியார் அப்பிடி இறக்குமதி செய்யாமலேயே எல்லா மருந்தையும் அளவு கணக்கில்லாமல் அடுக்கி வைச்சிருக்கினம். அவைக்கு எங்க இருந்து மருந்து கிடைக்குது? எல்லாம் அரசாங்க ஆஸ்பத்திரியளின்ட புண்ணியத்தில தானாம்.

சனத்துக்கு எண்டு வாற மருந்துகளை சில ஆஸ்பத்திரியள், குறிப்பா பின்தங்கின பிரதேசங்களில இருக்கிற ஆஸ்பத்திரியளில வேலை செய்யிறவை அப்பிடியே 'லபக்கி' தனியாருக்கு குடுக்கினமாம். ஆனால் அரசாங்கத்துக்கு கணக்குக் காட்டவேணுமே. அதுக்காக அந்த ஆஸ்பத்திரிக்கு ஒருநாளைக்கு நூறுபேர் வந்தால், இருநூறு பேர் வந்ததாக் கணக்குக் காட்டிப்போட்டு, மருந்துகளை ஆட்டையைப் போடுகினமாம். அதைவிட டாக்குத்தர்மார் எழுதிக்குடுத்த துண்டில உள்ள மருந்துகளைக் கூட அவைக்கு குடுத்தமாதிரிப் பதிஞ்சு போட்டு, அவையை பார்மஸியளில வாங்கச் சொல்லி வழியனுப்பி வைக்கினமாம். அதாலதான் இறக்குமதி எண்டால் என்னவெண்டே தெரியாத சில தனியாரிட்டக்கூட மருந்தெல்லாம் தாராளமா இருக்குதாம். இந்த வேலையை தனிய ஒராள், ரண்டு பேர் செய்யமுடியாது. 'கூட்டமைப்பா'எல்லாரும் கதைச்சுப் பேசித்தான், மருந்துகளைக் கைமாத்தி, காசு பாக்கினம் எண்டும் கதை.

இப்பிடியான கதையள் சிலவேளையளில மருந்து கிடைக்காத விரக்தியில ஆரும் கட்டிவிட்டதாக்கூட இருக்கலாம். ஆனால் உயிர் காக்கிற மருந்துகளில இப்பிடி கைவைக்கினம் எண்டு சின்ன அசுமாத்தம் இருந்தாலும் அதை ஒருக்கா விசாரிச்சால் நல்லமெல்லோ. உரியவை கொஞ்சம் இந்த விசயத்தில உண்மை இருக்கோ இல்லையோ எண்டு சொல்லாமல் கொள்ளாமல் சோதிக்கிறது தான் இதைக் கண்டுபிடிக்கிறதுக்குள்ள ஒரேவழி. செய்வினமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பெண்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்துக

## வவுனியாவில் பேரணி!

வவுனியா, டிசெ. 8
பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கெதிரான வன்முறைகளைத் தடுக்குமாறு வலியுறுத்தி வவுனியாவில் நேற்று வியாழக்கிழமை பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.
வவுனியா பழைய பேருந்து நிலையப் பகுதியில் இந்தப் பேரணி ஆரம்பிக்கப்பட்டு கண்டிவீதி வழியாக மருத்துவமனை சுற்றுவட்டத்தை அடைந்து அங்கிருந்து மாவட்டச் செயலகம் வரை சென்றடைந்தது.
பேரணியில் ஈடுபட்டவர்கள் "ஆண்கள்- பெண்கள் இருவரும் இவ்வுலகில் சமமே", "பெண்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாது ஒழிப்போம்" போன்ற வாசகங்களை ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். (ச-110)

## ஐயப்ப சாமிகள் குருதிக்கொடை

கொழும்பு, டிசெ. 8
ஐயப்பன் சுவாமிக்கு மாலை போட்டு விரதம் இருக்கும் பக்தர்கள் குருதிக்கொடையளித்துள்ளனர்.
இந்த முன்மாதிரியான செயற்பாடு நீர்கொழும்பு ஐயப்ப தேவஸ்தானத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-213)

## புராண இதிகாச கற்றல் வகுப்புகள் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 8
நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் நடத்தும் நாடகத்திறன் மூலமான புராண இதிகாசக் கதைகளைக் கற்றல் வகுப்பு எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் ஆரம்பிக்கப்படவுள்ளது. நாடக ஆசிரியரான இணுவையூர் ஞான ஏந்தல் மா. ந. பரமேஸ்வரன் பங்கேற்கவுள்ளார். பயிற்சி வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன. (ச)

## தாமரைக் கோபுரத்தில் சுழலும் உணவகம்

கொழும்பு, டிசெ. 8
கொழும்பிலுள்ள தாமரைக் கோபுரத்தில் முதலாவது சுழலும் உணவகத்தை தனியார் நிறுவனமொன்று நாளை திறப்பதற்குத் தீர்மானித்துள்ளது.
இந்தச் சுழலும் உணவகம் தெற்காசியாவின் மிக உயரமான இடத்திலுள்ள முதல் சுழலும் உணவகமாக மாறவுள்ளது. (ச-இ)

## ரயில் நிலையக் கூரையில் ஏறி வீழ்ந்து காயம்!

கொழும்பு, டிசெ.8
மருதானை ரயில் நிலையத்தில் 6ஆவது நடைமேடையின் கூரையின் மீது ஏறிய நபர்தவறி வீழ்ந்து படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது.
மேற்கூரை உடைந்ததில் அவர் நடைமேடையில் விழுந்து காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மருதானைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-75)

# ஈ.ரி.எப். அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 8
இந்த ஆண்டுக்கான தரம் -5 புலமைப்பரிசிலில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான 9 ஆயிரம் புலமைப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச்சபை அறிவித்துள்ளது.
விண்ணப்பிப்போர் www.etfb.lk என்ற இணையத் தளத்துக்குப்பிரவேசித்து தரம்- 5 புலமைப்பரிசில் விண்ணப்பத்தின் 3 பகுதிகளைப் பூர்த்தி செய்து தேவையான ஆவணங்களைப் பதிவேற்றவேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத்திகதி எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கொக்கிளாய் மாணவர்கள் நூற்றுக்கு நூறு

முல்லைத்தீவு, டிசெ.8
முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமாகக் காணப்படும் கொக்கிளாய் பகுதியில் உரிய அடிப்படை வசதிகளின்றி இயங்கிவரும் கொக்கிளாய் பாடசாலை மாணவர்கள் கா.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் 100 வீத சித்தி பெற்று சாதனையீட்டியுள்ளனர்.
முல்லைத்தீவு கல்வி வலயத்துக்குட்பட்ட இந்தப் பாடசாலையில் இந்த ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த 4 மாணவர்களும் நூறு வீத சித்தியைப் பதிவுசெய்துள்ளனர்.
எல்லைக்கிராமத்தில் நில ஆக்கிரமிப்புக்கு மத்தியிலும் விசேடமாக கல்வி நிலைய வசதிகள் ஏதும் இன்றியும் பாடசாலைக் கல்வியை மாத்திரம் கற்று இந்தச் சித்தியை அவர்கள் அடைந்துள்ளனர். (ச-19)

## உபகரணங்கள் வழங்கி வைப்பு!

சாவகச்சேரி சிவன் கோவில் பகுதியில் வசிக்கும் 15 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நுணாவில் கிழக்கு சர்வசாதன சனசமூக நிலைய மண்டபத்தில் வைத்து கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன. நுணாவில் கிழக்கைச் சேர்ந்த அமரர் எட்வேட் நினைவாக அவரது குடும்பத்தினரால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ரி-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




# இனவாத விதைப்பும் அரசியல் அறுவடையும்

மாவீரர் நாள் நினைவேந்தல் நிறைவுக்கு வந்து ஒரு வாரம் கடந்து விட்டது. ஆனால் மழைவிட்டும் தூவானம் விடாத குறையாக, மாவீரர்நாளால் உண்டான சலசலப்பு மாத்திரம் இன்னமும் குறையவில்லை. மாவீரர் நாளைப் பயன்படுத்தி எப்படி அரசியல் ஆதாயம் தேடலாம், பௌத்த - சிங்கள மக்களை உசுப்பேத்தலாம் என்று தென்னிலங்கை தினமும் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றது. நாடாளுமன்றத்திலும் சரி, அதற்கு வெளியிலும் மாவீரர் நாளை வைத்துக்கொண்டு தென்னிலங்கை அரசியல்வாதிகள் நடத்தும் கூத்துகள் இன்னமும் அடங்குவதாயில்லை. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த தென்னக்கோன், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்று தொடர்ச்சியாக மாவீரர் நாள் தொடர்பில் பேசி வருகின்றனர். 'மாவீரர் நாளை கடைப்பிடிக்க அனுமதித்தமை கவலைக்குரியது', 'மாவீரர் நாளை கடைப்பிடித்த அனைவரையும் கைது செய்வோம்', 'ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தொடர்ந்தால் புலிகள் மீளுருவாக்கப்படுவர்', 'மாவீரர் நாளை கடைப்பிடித்த அனைவரையும் கைது செய்யுமாறு அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் பணிப்பு' இந்தச் செய்திகளே தென்னிலங்கையில் அண்மைக்கால பேசுபொருள்.

அடுத்த ஆண்டு தேர்தலுக்கு நாடு முழுதும் தயாராகி வருகின்றது. நாட்டின் வங்குரோத்து நிலைமையிலிருந்து மீட்சியில்லை. பொருளாதார மேம்பாட்டுக்கான திட்டங்களை முன்வைத்து துணிவுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு யாரும் தயாரில்லை. எனவே அடுத்த ஆண்டு தேர்தலுக்காக மீண்டும் இனவாதத்தைக் கையிலெடுப்பதற்கு தென்னிலங்கை தயாராகிவிட்டது. அதையே இந்தச் செய்திகள் கட்டியம் சொல்கின்றன. விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றியீட்டியதை வைத்து ராஜபக்ச குடும்பம் அரசியல் செய்தது. ஒரு கட்டத்தில் புலிகளைப் பயன்படுத்தாமல் அவர்களால் தேர்தலில் வெல்ல முடியாத சூழல் இருந்தது. அதனால் அடிக்கடி ராஜபக்சக்களால் புலிக்கதை சொல்லப்பட்டு வந்தது. இப்போதும் தேர்தல் காய்ச்சல் என்றவுடன் மீண்டும் புலிக்கதை அரங்கில் பேச ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

மாவீரர் தினம் தமிழர் தாயகத்தில் அமைதியாக நடந்து முடிந்திருக்கின்றது. மாவீரர் நாள் இங்கு கடைப்பிடிக்கப்பட்டமையால் எந்தவொரு குழப்பமும் ஏற்படவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் இன முறுகல் தோன்றவில்லை. மாவீரர் நாளைக் கடைப் பிடித்த மக்கள் தங்கள் உறவுகளை அமைதியாக நினைவுகூர்ந்து விட்டு தங்கள் வேலைகளைப் பார்க்கப் போய்விட்டனர். புலிகளை மீளுருவாக்குவது பற்றிச் சிந்திப்பதற்கோ அது தொடர்பான திட்டங்களை முன்னெடுப்பதற்கோ இங்கு எவருமில்லை. ஆனால் சிங்கள அரசியல்வாதிகளே, இங்கு நடக்காத விடயத்தை திரும்பத் திரும்பச் சொல்லி தங்கள் வாக்கு ஆதாயத்துக்காக இவற்றைக் கிளறிக் கொண்டிருக்கின்றனர். மாவீரர்நாளைகடைப்பிடித்தமையால் இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு எந்தவொரு குந்தகமும் ஏற்படவில்லை. மாறாக மாவீரர்தினத்தைக் காரணம் காட்டி தமிழர் தாயகத்தில் பாதுகாப்புக் கெடுபிடிகளைத்தான் ஏற்படுத்தியிருந்தார்கள். இப்படியானதொரு சூழலில் மாவீரர் நாளை வைத்து அரசியல் செய்து சிங்கள மக்களிடத்தில் தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு சிங்கள அரசியல்வாதிகள் முயல்கின்றார்கள். இந்த நாட்டில் இன்றுவரை தீர்க்கமுடியாத இனப்பிரச்சினைக்கு வித்திட்டதும் இவ்வாறுதான். அமைதியாக இருக்கும் மக்களிடத்தில் தங்களின் வாக்குகளுக்காக இனவாதத்தை விதைத்துவிட்டு இன்றுவரை அதைவைத்தே அரசியல் அறுவடை செய்கின்றனர். இதேபோக்கு இனியும் தொடர்ந்தால், நாடு இப்போதிருப்பதைக் காட்டிலும் மோசமான நிலைக்கே செல்லும். இதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்ந்தால் சரி.




# உறுதிமொழிகளை மீறுவதால் ஆதரவிழக்கின்றது இலங்கை!

**கொழும்பு, டிசெ. 8**

**ஜெனிவாவுக்குச் சென்று உறுதிமொழிகளை வழங்கிவிட்டு அதற்கு மாறாகவே அரசு செயற்படுகின்றது. இதனால் இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகளின் ஆதரவையும் இழந்துள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.**

'2009ஆம் ஆண்டில் இருந்தே ஜெனிவாப் பிரச்சினை இருந்துவருகின்றது. அக்காலப்பகுதியில் ஜெனிவாவில் சில விடயங்களில் ஆசிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாகச் செயற்பட்டன. ஆனால் இங்கு ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவும், வாக்கு வேட்டைக்காகவும் இனவாதம், மதவாதம் தூண்டப்பட்டதால் அரபு நாடுகளின் ஆதரவை நாடு இழந்தது. இந்தியா, ஜப்பான் போன்ற நாடுகள்கூட ஆதரவு வழங்கா நிலை ஏற்பட்டது. ஜெனிவாவுக்குச் சென்று ஒரு கதையைக் கூறிவிட்டு, நாட்டில் வேறொன்றை முன்னெடுத்தால் அதனை நம்புவதற்கு அங்குள்ளவர்கள் முட்டாள்கள் அல்லர். மனித உரிமைகள் நிலைநாட்டப்படவேண்டும். வாக்கு அரசியலுக்காக நாட்டுக்கு இருந்த நற்பெயர் இல்லாமல் செய்யப்பட்டது. தற்போதைய ஜனாதிபதி எதிரணியில் இருக்கும்போது என்ன சொன்னார்? அதற்கு மாறாகவே தற்போது செயற்படுகின்றார்' என்று அவர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தார். (ஒ-44)

# ஐ.நா.வின் தாளத்துக்கு ஆடாதாம் இலங்கை

## அமைச்சர் அலி சப்ரி ஆவேசம்

இலங்கையின் இறையாண்மையைக் காட்டிக்கொடுத்துவிட்டு, ஐக்கிய நாடுகள்சபையின் தேவைக்கேற்ப நாட்டை நிர்வகிப்பதற்குத் தயாரில்லை என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது;-

தமிழ் மக்களும் இந்நாட்டு பிரஜைகள் என்ற அடிப்படையில் ஏனையோருக்கு உள்ள உரிமைகள் அவர்களுக்கும் அப்படியே இருக்கவேண்டும். அதேபோல அடுத்த தலைமுறையையும் பிரிவினைவாதம் நோக்கித் தள்ளுவதையும் நிறுத்தவேண் டும்- என்றார். (ஒ-44)

# சடலம் மீட்பு

பெரியவிளானைச் சேர்ந்த ஜெயசீலன் திவாகர் (வயது - 18) என்ற இளைஞன் வீட்டுக் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். அவர் தவறான முடிவு எடுத்து உயிரிழந்துள்ளார் என இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-27)

# வாள்வெட்டில் இருவர் காயம்

வவுனியா, டிசெ. 8

ஓயார் சின்னக்குளத்தில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தில் நேற்றுமுன்தினம் இரவு மதுபோதையில் சென்ற குழுவினர் அங்கு நின்ற இருவர் மீது துரத்தித் துரத்தி வாளால் வெட்டியுள்ளனர். ஒரேகுடும்பத்தை சேர்ந்த சகோதரர்கள் இருவர் காயமடைந்தநிலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-110)



# கரைவலையில் 20 கிலோ விரால் மீன்

வடமராட்சி கிழக்கு நாகர் கோவிலில், கரை வலையில் 20 கிலோ கடல் விரால் வகை மீன் கடந்த திங்கட்கிழமைபிடிபட்டுள்ளது. 5 கிலோவுக்கு உட்பட்ட தான எடையுடைய கடல் விரால் வகை மீன்களே பிடிபடுவது வழக்கமாகும். இந்நிலையில் நாகர்கோவில் வடக்கு பகுதியைச் சேர்ந்த கமல் சம்மாட்டியின் கரை வலையிலேயே 20 கிலோ எடையுடைய கடல் விரால் மீன் பிடிபட்டுள்ளது. (ஒ-100)

## நாளை

09.12.2023

**சனிக்கிழமை**

**கார்த்திகை - 23**

சுபநேரம் : 03.18 - 04.48

ராகுகாலம் : 09.18 - 10.48

## நாளொரு நல்வார்த்தை

**ஊக்குவிக்க ஆள்**
**இருந்தால் ஊக்கு**
**விற்பவனும் தேக்கு விற்பான்.**

**– கவிஞர் வாலி –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவருக்கு அனுமதி இந்தியாவுடன் இணக்கமா?

## எதிர்க்கட்சி கேள்வி

**கொழும்பு, டிசெ.8**

**வடக்குக் கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு இந்திய மீனவர்களுக்கு அனுமதி வழங்கும் நடைமுறை தொடர்பில் இந்தியாவுடன் இணக்கம் எட்டப்பட்டுள்ளதா? இது தொடர்பில் அரசின் உறுதியான நிலைப்பாடு என்ன? என்று கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்பரப்புக்குள் வருவதற்கு 'பெர்மிட்' வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என இந்தியத் தொலைக்காட்சிக்கு வழங்கியநேர்காணலில்பிரதமர்குறிப்பிட்டிருந்தார். இந்த முன்மொழிவை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இந்திய மீனவர்கள் ரோலர் படகுகள் மூலமே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது கடல்வளம் அழிவடையும். மீன்பிடி அமைச்சர்கூட இத்திட்டத்தை எதிர்த்துள்ளார். எனினும், பிரதமர் உள்ளிட்ட அரசு வேறு நிலைப்பாட்டில் உள்ளது. இந்திய மீனவர்கள் இங்கு வந்து மீன்பிடிக்க அனுமதி வழங்குவது குறித்து இந்திய அரசுடன் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதா? கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது தவறு என இந்தியப் பிரதமர் மோடி அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இது தொடர்பிலும் பேச்சு நடத்தப்பட்டுள்ளதா? இந்தியாவுக்கு வழங்கவுள்ள கடனுக்கும் இதற்கும் இடையில் தொடர்பு உள்ளதா? - என்றார்.

(எ-44)

உ

சிவமயம்

**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில் பரிபாலன சபை வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல்**

**24.12.2023**

மேற்படி ஆலயத்தின் 2023 - 2024ம் நிதி ஆண்டின் (2023 ஒக்ரோபர் - 2024 செப்ரம்பர்) பரிபாலன சபை தெரிவிற்கான வருடாந்தப் பொதுக்கூட்டம் 24.12.2023 திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி 2023 - 2024ம் நிதி ஆண்டிற்கு ஏற்கனவே அங்கத்துவத்தை புதுப்பித்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

(மேற்படி பொதுக்கூட்டத்திற்கு ஏற்கனவே திகதி அறிவிக்கப்பட்டு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது)

**பரிபாலன சபை சார்பில்**

**தலைவர்.** **07.12.2023** **செயலாளர்**

SLTMOBITEL
The Connection

**SRI LANKA TELECOM TENDER NOTICE**

**புதிய விற்பனை முகவர்களை பதிவு செய்தல் - 2024**

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனமானது (SLT) 2024ம் ஆண்டுக்கான முகவர்களைப் பதிவு செய்வதற்காக பொருத்தமான அமைப்புகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. தெரிவு செய்யப்படும் முகவர்கள் ஒதுக்கப்பட்ட பகுதிகளில் SLT நுகர்வுப்பொருட்களை மேம்படுத்துவதற்கும் விற்பனை செய்வதற்கும் அங்கீகரிக்கப்படுவார்கள்.

இப்பதிவு ஒருவருடகாலப்பகுதிக்கானது. நீடிப்புக்காலமானது SLT முகாமையினால் செயற்திறனை அடிப்படையாகக்கொண்டு தீர்மானிக்கப்படும்.

SLT **கேள்வி** தளத்தில் http://www.slt.lk/tenders இருந்து விண்ணப்பத்தை பதிவிறக்கம் (Download) செய்து, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை manjuse@slt.com.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பின்வரும் முகவரிக்கு, கீழே தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**Manager Channel Management**
**Channel Management section**
**1st Floor - CTC Building**
**Sri Lanka Telecom PLC**
**Lotus Road, Colombo-01**

விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டிய ஆவணங்கள்

1. வணிக பதிவு ஆவணத்தின் நகல்
2. படிவம் 1இன் நகல் அல்லது இயக்குநர்களின் விபரங்களைக் கொண்ட பொருத்தமான ஆவணம் (வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனங்களுக்கு)
3. பங்குடமையாயின் பங்காளர்களின் விபரங்கள்
4. இயக்குநர்கள்/ உரிமையாளர்கள் அல்லது பங்காளர்களின் அடையாள அட்டை நகல்.

விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி 20.12.2023.
மேலதிக விபரங்களுக்கு 0716803066 என்ற எண்ணை அழைக்கவும்.

**பொது முகாமையாளர் கொள்முதல்,**
**ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம்**
**லோட்டஸ் வீதி**
**கொழும்பு - 01**

# அரசமைப்புப் பேரவையில் தமிழர்கள் புறக்கணிப்பு!

## சுமந்திரன் நேற்றுத் தெரிவிப்பு

அரசமைப்புப் பேரவை என்பது ஒரு முக்கியமான அமைப்பு. அதிலே வடக்கு-கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒருவர்கூட இல்லாமல் இருப்பது தேசிய வாழ்க்கையில் இருந்து எம்மை அப்புறப்படுத்தும் செயற்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் வைத்து நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புப் பேரவையில் சித்தார்த்தனின் பெயரை நாம் முன்மொழிந்தோம். எதிர்க்கட்சிகளில் இரண்டாவது பெரிய கட்சியாக நாடாளுமன்றில் நாம் இருக்கின்றோம். ஆகவே அவருக்கு அந்த இடம் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். துரதிஷ்டவசமாக அரசபக்கத்தில் இருந்து பலர் எதிர்க்கட்சி உறுப்பினர்களாக அமர்ந்துள்ளனர். அவர்களது எண்ணிக்கை எங்களது எண்ணிக்கையினை விட கூடுதலாகவுள்ளது. இதனால் அந்த விடயம் முடிவில்லாமல் நிறைவடைந்திருக்கின்றது.

சபாநாயகர் இது தொடர்பாக தெளிவான ஒரு முடிவினை எடுக்காமல் இருக்கிறார். எம்மோடு பேசும்போது அந்த பிரதிநிதித்துவம் உங்களுக்குத்தான் என்று சொல்கிறார். ஆனால், அந்த உத்தரவை அவர் செய்ய மறுக்கின்றார். எதிர்க்கட்சித் தலைவரும் எமது நிலைப்பாட்டோடு இணங்கியிருக்கின்றார். பெரமுனவின் பொதுச்செயலாளரும் அதற்கு இணங்கியிருக்கின்றார். இதனை நாடாளுமன்றிலே ஒரு தீர்மானமாகக்கூட நிறைவேற்றி செயற்படுத்தலாம்.

முதலாவது குடியரசு அரசமைப்பு உருவாக்கப்படும்போது பேரினவாத நோக்குடன் எவ்வாறு எம்மை தேசிய வாழ்க்கையில் இருந்து புறக்கணித்தார்களோ அவ்வாறான ஒருநிலமை மீண்டும் நடைபெறும் அறிகுறியாகவே இதனைப் பார்க்க வேண்டியுள்ளது - என்றார். (அ-ம-110-18)

## ஈழத்து இலக்கியத்துறைக்கு பங்காற்றிய

# மூத்த பேராசிரியர் யோகராசா மறைவு

யாழ்ப்பாணம், டிசெ. 8

கிழக்குப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் மூத்த பேராசிரியரும், ஈழத்து இலக்கியத் துறைக்கு பங்காற்றிய பெருந்தகையாளருமான பேராசிரியர் செ.யோகராசா நேற்று வியாழக்கிழமை மதியம் கொழும்பில் காலமானார்.



யாழ்ப்பாணம், வடமராட்சி - கரவெட்டியைச் சொந்த இடமாகக் கொண்ட பேராசிரியர் செ.யோகராசா ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், எட்டு நூல்கள், ஆறு தொகுப்பு நூல்களை இலக்கிய உலகத்துக்குத் தந்துள்ளார். அத்துடன் கடந்த மூன்று தசாப்த காலத்துக்கும் மேலாக நவீன இலக்கியம் சம்பந்தமான பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளை வெளிக்கொணர்ந்துள்ளார். ஈழத்து இலக்கிய வரலாறு, புகலிட இலக்கியம், போர் இலக்கியம், பெண்ணிய இலக்கியம், நாட்டார் இலக்கியம், சிறுவர் இலக்கியம் போன்ற பல்வேறு துறை சார்ந்த இவரது ஆய்வுகள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை.

இவர் 'ஈழத்து நவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் புதிய தரவுகள் புதிய போக்குகள்' என்ற நூலுக்காக 2007ஆம் ஆண்டில் தேசிய சாகித்திய விருதினையும், 'பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை - பிரதேச சாகித்திய விருதை இதே ஆண்டிலும், பின்னர் 'ஈழத்து நாவல் வளர்ச்சியும் வளமும்' பிரதேச சாகித்திய விருதை 2008ஆம் ஆண்டிலும் பெற்றுள்ளார்.

இதேவேளை- பேராசிரியர் யோகராசாவின் இழப்பு ஈழத்து இலக்கியத் துறைக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு எனப் பேராசிரியர்கள், கல்விப் புலம் சார்ந்தவர்கள் மற்றும் இலக்கியத்துறை சார்ந்தவர்கள் பலரும் கருத்துகளை வெளியிட்டுள்ளனர். (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி தங்கரத்தினம் நடராசா



எமது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக மகளிர் அமைப்பின் உறுப்பினர் **திருமதி சிவகலா சத்தியமூர்த்தி** அவர்களின் அன்புத்தாயாரும், வளர்மதி நிறைவாழ்வகத் தலைவர் **திரு.ஆ.சத்தியமூர்த்தி** அவர்களின் மாமியாரும் கழக உறுப்பினர்களான **ச.நிரோஷன். ச. சாருஷன். ச. மயூரி** அவர்களின் பேர்த்தியாருமாகிய **திருமதி தங்கரத்தினம் நடராசா** அவர்கள் 06.12.2023 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அமரரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்திற்கு எமது வளர்மதி முன்னேற்றக்கழகம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

பிறப்பு 23.06.1932 — இறப்பு 06.12.2023

**கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம்**
**வளர்மதி நிறைவாழ்வகம்**
**வளர்மதி மகளிர் அமைப்பு**

**சம்பியன்லேன், கொக்குவில்.**

# கலைவிழா

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் கலைவிழா நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கத்தில் அதிபர் திருமதி இராஜினிதேவி முத்துக்குமரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ.சுப்பிரமணியம் கலந்துகொள்ளவுள்ளார். (ம-159)

## வாடகைக்கு

மானிப்பாய் வீதி ஆணைக்கோட்டை சந்தியில் கடையுடன் சேர்ந்த மேல் வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்புகளுக்கு :
077 828 5684, 021 222 5219

# பரிசளிப்பு விழா

*யாழ்ப்பாணம், டிசெ. 8*

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலி. தென்மேற்கு பிரதேச சபையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் செயலாளர் சீவரத்தினம் சபேசன் தலைமையில் பி.ப 1.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் உதவி பிரதேச செயலர் நேசரட்ணம் செல்வக்குமாரி கலந்து கொள்ளவுள்ளார். (ம-125)

# பொது மக்களுக்கான அறிவித்தல்
## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## 2024 ஆம் ஆண்டிற்கான குத்தகை வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கூறல்

கரைதுறைப்பற்று பிரதேசசபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் சந்தைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் என்பனவற்றை 2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் கோரப்படுகின்றது.

பற்றுச்சீட்டு வழங்கப்படும் காலம் :- 08.12.2023 மு.ப 9.00 மணி தொடக்கம் 14.12.2023 பி.ப 02.00 மணிவரை (அலுவலக நாட்களில் மட்டும்)
ஏலம் கூறப்படும் இடம் :- கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகம்
ஏலம் கூறப்படும் நேரம் :- 15.12.2023 முற்பகல் 10.30 மணி

| இல | பெயர் | மீளளிக்க முடியாத ஏலப்படிவக் கட்டணம் (VAT,NBT) நீங்கலாக | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | மீளளிக்கக் கூடிய ஏல வைப்புப் தொகை (VAT,NBT) நீங்கலாக | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| | முள்ளியவளை உப அலுவலகம் | | | | |
| 1 | வற்றாப்பளை பொதுச்சந்தை | 2,000.00 | - | 1,000.00 | 46,350.00 |
| 2 | சிலாவத்தை பொதுச்சந்தை | 2,000.00 | - | 2,000.00 | 45,000.00 |
| 3 | கேப்பாப்பிலவு பொதுச்சந்தை | 2,000.00 | - | 1,000.00 | 4,455.00 |
| 4 | முள்ளியவளை மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 40,000.00 | 1,200,000.00 |
| 5 | தண்ணீரூற்று மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,800.00 | 90,000.00 | 2,711,100.00 |
| 6 | தண்ணீரூற்று கோழிஇறைச்சிக்கடை | 2,000.00 | 1,800.00 | 80,000.00 | 2,361,100.00 |
| 7 | கேப்பாபிலவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 4,000.00 | 120,000.00 |
| | முல்லைத்தீவு உபஅலுவலகம் | | | | |
| 1 | முல்லைத்தீவு மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 70,000.00 | 2,100,000.00 |
| 2 | முல்லைத்தீவு கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 2,000.00 | 50,000.00 | 1,451,005.00 |
| | கொக்கிளாய் உப அலுவலகம் | | | | |
| 1 | கொக்கிளாய் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 25,000.00 | 630,000.00 |
| 2 | கொக்கிளாய் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 20,000.00 | 473,310.00 |
| 3 | கொக்குத்தொடுவாய் பொதுச்சந்தை | 2,000.00 | - | 1,000.00 | 2,700.00 |
| | முள்ளிவாய்க்கால் உப அலுவலகம் | | | | |
| 1 | முள்ளிவாய்க்கால் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 4,000.00 | 103,500.00 |
| 2 | முள்ளிவாய்க்கால் கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 1,000.00 | 3,600.00 |
| 3 | முள்ளிவாய்க்கால் பொதுச்சந்தை | 2,000.00 | - | 1,000.00 | 2,835.00 |
| 4 | புதுமாத்தளன் மாட்டிறைச்சிக்கடை | 2,000.00 | - | 2,000.00 | 40,959.00 |
| | செம்மலை உப அலுவலகம் | | | | |
| 1 | அளம்பில் பொதுச்சந்தை | 2,000.00 | - | 1,000.00 | 10,800.00 |

### ஏலத்தில் பங்குபற்றுவதற்கான நியந்தனைகள்

1. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. முதலாம் சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2023.12.18 ஆம் திகதிக்கு பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்துகொள்ளவேண்டும். தவறின் அடுத்த தர சித்திதாரர்களுக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கப்படும். அவர்கள் பெற்றுக்கொள்வதாயின் சம்மதக் கடித்தினை 2023.12.18 பிற்பகல் 3.30 மணிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட வேண்டும் அவர்கள் 1/3 பகுதியை 2023.12.20 ஆம் திகதிக்கு மு.ப 10.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். அத்துடன் மிகுதித் தொகையினை 8 சமபங்குப் படி தை தொடக்கம் ஆவணி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதம் இறுதித் திகதிக்கு முன்னைய வேலைநாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும். மேலதிக விபரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் வடக்கு மாகாண எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி. தாம் வதியும் கிராம சேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிடச் சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஏலத்திற்கு விண்ணப்பதாரர் மட்டும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.
4. ஏனைய நிபந்தனைகள் தினக்குரல் நாளிதளின் 2023.09.19 மற்றும் உதயன் நாளிதளின் 2023.10.26 ஆம் திகதிய பத்திரிகையில் உள்ள எமது சபை கேள்வி கோரல் நிபந்தனைகளை அல்லது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளவும்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**08.12.2023**

# கண்ணீர் அஞ்சலி

**யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் சமூர்த்தி முகாமையாளராக கடமையாற்றும் திருமதி கோகிலா பிரசாந்தன் அவர்களின்**
பாசமிகு தந்தையார்

## திரு. இளையதம்பி சிதம்பரநாதன்

அவர்கள் கடந்த (5.12.2023) செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்ததையிட்டு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**நலன்புரிச் சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 11.11.1941 மறைவு 07.12.2023

எமது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் **திருமதி.சயந்தன் பிருந்தாமலர்** அவர்களின் அன்புத் தந்தையார்

## கந்தையா சங்கரலிங்கம்


அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலக உத்தியோகத்தர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்.**

(CR 41158) S-1

# மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 11 . 1941



மறைவு 07 . 12 . 2023

## கந்தையா சங்கரலிங்கம்

**(சைனு மரக்காலை முன்னாள் உரிமையாளர், மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி.)**

தச்சந்தோப்பை பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சங்கரலிங்கம் (சைனு மரக்காலை முன்னாள் உரிமையாளர்) அவர்கள் நேற்று (07.12.2023) வியாழக்கிழமை மதியம் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமுவள்ளிப்பிள்ளை, கண் மணி, சின்னத்தங்கச்சி ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற கந்தையா பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், கௌரியம்மா வின் அன்புக் கணவரும், உதயமலர், செல்வமலர் (ஆசிரியை, யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்), உதயகுமார் (சைனு மரக்காலை, மானிப்பாய் வீதி, கோப்பாய் சந்தி), கோணேஸ்வரகுமார், பிருந்தா மலர் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணபாலன் (டோகா), மகாலிங்கம் (டுபாய்) அபிராமி, தர்சினி, சயந்தன் (ஆசிரியர், யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், பிரியங்கன் (அவுஸ்தி ரேலியா), சகானா, கஜானா, பாவனா, துஜானா, ஆதனா, அக்ஷயன், ஸ்ரீஹரி, ஹனுஷ் ஹரி, சஷ்டினா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2023) வெள்ளிக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக் காக பி.ப. 1.00 மணிக்கு தச்சந்தோப்பு பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**MPCS ஒழுங்கை,**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**தகவல்:குடும்பத்தினர்.**
077 0310 842 (மகன்)
071 9998 598 (மகன்)
077 6176 595 (மகள்)
021 223 2057 (மகன்)

(CR 41158)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18.04.2000

உதிர்வு
19.11.2022



நயினாதீவு ஏழாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர் விஜயேந்திரன் ஷஜிந்தன்

**திதி: அபுரபக்க ஏகாதசி (தேய்பிறை)**





அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்துப் பக்குவமாய் வழிநடந்த
இரக்கத்தின் இருப்பிடமாய் எல்லோர்க்கும் நல்லதாய்
எல்லோர் மனதிலும் இருந்த எம் ஷஜிந்தன்
ஏனோ! இறைவன் இடை நடுவில் பறித்துவிட்டான்
ஓடி மறைந்ததடா ஓராண்டு உன் நினைவுகள்
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறைந்திடுமா
பண்புள்ளோரைப் பலகாலம் வாழவிடக் கூடாதென்றா?
உம்மை ஆண்டவன் அழைத்தான் என் செய்வோம் இறைவன் சித்தம் இது
இனிக் காணமுடியாத சோகநிலையோடு இங்கிருந்தே
ஏங்கி அழுகின்றோம் - மகனே!

அன்னாரின் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை இன்று (08.12.2023) வெள்ளிக் கிழமை 7 ஆம் வட்டாரம் நயினாதீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

**அன்னாரின் ஆத்ம சாந்தியடைய**
**எல்லாம் வல்ல நயினை நாகபூஷணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.**

7 ம் வட்டாரம்,
நயினாதீவு.


பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(cs 53103) (N.1)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 • 11 • 1947

இறைவன் அடியில்
19 • 11 • 2022



## அமரர் ஆறுமுகம் பேரின்பநாயகம் (குணம்)
## (சபீதா உணவகம்)

ஆண்டொன்று சென்றதப்பா - உங்கள்
பேரின்ப முகம் கண்டு
உயர் குணமேவிய திருவுருவாய் உங்கள்
சாந்தமான மொழி கேட்க
கனவில் தேடிப்பார்க்கின்றோம்.
கண்களில் இருக்கும் எம் அப்பாவை....
எம் மனம் சிறுபிள்ளை போல் அடம்பிடிக்கின்றது
அப்பா வேண்டுமென்று....
நீர் அற்ற குளத்தில் தத்தளிக்கும்
மீன்களைப் போல
எம் தந்தை இல்லா உலகில் தவிக்கின்றோம்.
நாங்கள் உங்கள் அன்புக்காக
இறைவனின் பாதங்களில் எம் தந்தையின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி !!!**

10/3, நுணாவில் கல்வயல்,
1ஆம் ஒழுங்கை, நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு
23 - 06 - 1932

இறப்பு
06 - 12 - 2023



## திருமதி தங்கரத்தினம் நடராசா

ஏழாலை வடக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் விதானை லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கரத்தினம் நடராசா கடந்த (06.12.2023) புதன்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் ஏழாலை வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், சாவகச்சேரியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் அன்பு மனைவியும் ரவிசங்கர் (ஜேர்மனி), சிவரூபி (கனடா), சிவகலா (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு தயாரும், சாந்தி (ஜேர்மனி), சத்தியமூர்த்தி (கொக்குவில்), காலஞ்சென்ற சிவ:பாதம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா, செல்லத்துரை, சிவலிங்கம், ராசரட்ணம் ஆகியோரின் அருமைச் சகோதரியும், சிவபாக்கியம் (UK), விக்கினேஸ்வரராசா (அச்சுவேலி), சாரதாதேவி (ஏழாலை), அருணகிரிநாதன் (ஏழாலை) ஆகியோரின் சீனியம்மாவும், சுசிலாதேவி, கமலாதேவி, சுலோஜனாதேவி, சர்வேஸ்வரன், சிவாஜி, சந்திரன் ஆகியோரின் மாமியாரும், விதுரன், கபிலன், ராகேஷ், சபிக்ரா, நிரோசா, நிரோஷன், சாருஷன், மயூரி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கிரியைக்கு பின் பூதவுடல் முற்பகல் 11.30 மதியம் 12.30 மணி வரை ஏழாலை வடக்கு (ஏழாலை பிரதேசசபை முன்) இல் அமைந்துள்ள அன்னாரில் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உச்த்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விதானை லேன்,
கொக்குவில் கிழக்கு.

தகவல்:
ஆ.சத்தியமூர்த்தி
0771698073

(CS 27095)(K-1)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 12 . 1957

மறைவு
06 . 12 . 2023



## திருமதி கதிர்காமநாதன் தர்மபூபதி

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் மட்டுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கதிர்காமநாதன் தர்மபூபதி அவர்கள் கடந்த (06.12.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா அன்னரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பிராசா கதிர்காமநாதன் ஆசாரியார் அவர்களின் அன்பு மனைவியும், நிறஞ்சன், வினோஜன், கார்த்திகன் ஆகியோரின் அன்புத் தாயாரும், தர்மபாலன், தர்மராசன், பரமேஸ்வரன் (அவுஸ்திரேலியா), தர்மேஸ்வரன், தர்மகடாட்சரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோபாலகிருஷ்ணன், தேவராணி, கணேசலிங்கம் (ஜேர்மனி), சிவராணி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மட்டுவில் தெற்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் கோயில் வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
077 8262 846

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 27309) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**மார்க்கண்டு உதயகுமார்**
(புத்தூர் உபதபால் ஊழியர்)

தோற்றம்
24.12.1956

**உதயகுமார் வசந்திமாலா**
(நீர்வேலி மேற்கு, 4ஆம் மைல், இராஜவீதி, நீர்வேலி)

தோற்றம்
08.02.1966

**இறைவன் அடியில் : 08.12.2011**

நிழல் போல் இருந்தவர்கள் நீங்கள்
நினைவாய் மாறினீர்கள்
கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியானீர்கள்...!

நேற்று வரை எம்மோடு ஒருவராய்
அன்போடு வாழ்ந்தீர்கள்
காலமெல்லாம் எமைச் சுமப்பீர்கள் என்றிருக்க
கண்ணீரைத் தந்துவிட்டு விண்ணோடு போனதேனோ..!

காற்றுக் கூட நிரப்ப முடியாத
வெற்றிடமானது நீர் வாழ்ந்த உலகம்...!
என் செய்வோம்
இறைவன் சித்தம் இது தானோ...!
இனிக் காண முடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கியழுகின்றோம்....!

ஆற்றொணாத துயரமது ஊற்றாகி
இன்றோடு 12 ஆண்டுகள் ஓடி மறைந்ததையா...!
இனிக் கவிதை எழுதியோ
கண்ணீர் வடித்தோ
எம் சோகத்தை
ஆற்றிக் கொள்ள முடியாது...!

எனினும் எமக்கொரு ஆசை...!
மறுபடியும் மறுபடியும்
மறுஜென்மம் அனைத்திலும்
உங்கள் பிள்ளைகளாக நாம்
பிறந்திட வேண்டும்...!

அதில் எங்கள் ஆயுளையும்
உமக்குத் தந்து
உங்களைப் பிரியாமல்
காத்திட வேண்டும்...!

உம் ஆத்மா சாந்தியுற உள்ளத்தால் வேண்டுகின்றோம்.

என்றும் உம் நினைவுடன் வாழும் குடும்பத்தார்...!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**பிள்ளைகள் :**

**செந்தூரன் (பிரான்ஸ்), குகதீபன் (கனடா), சங்கீதன் (கனடா), கோபிகா (கனடா)**

(cs 53098) (N 1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 03 - 1945



மறைவு
06 - 12 - 2023

## நிற்சிங்கசேனாதிராசா இலங்கையர்

வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வரணி - கைதடியை வசிப்பிடமாகவும் கொண்ட நிற்சிங்கசேனாதிராசா இலங்கையர் அவர்கள் கடந்த (06.12.2023) புதன்கிழமை இரவு 8.30 மணியளவில் இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நிற்சிங்கசேனாதிராசா சிவகாமசுந்தரி தம்பதிகளின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற தில்லைநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவயோகம்மா, தனபாலசிங்கம் மற்றும் பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாந்தநாயகி (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற குகநாதன் மற்றும் விஜயநாதன் (லண்டன்), ரவீந்திரநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், பவளகுமாரன் (ஓய்வு நிலை அதிபர்), ஈஸ்வரி, அகிலா (லண்டன்), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜீவிதன் (வைத்தியர் - கண்டி தேசிய வைத்தியசாலை), கோபிதா (இறுதியாண்டு மருத்துவபீட மாணவி - யாழ். பல்கலைக் கழகம்), விதுர்சன் (இரண்டாம் வருட பொறியியற்பீட மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம்), தர்சிகன், மதுஷா (க.பொ.த உயர்தர மாணவி- கொக்குவில் இந்துக்கல்லூரி) லாகுல் (மருத்துவபீட மாணவன் - லண்டன்), மேகவி (மாணவி - லண்டன்), ஞானுஜன் (மாணவன் - கனடா), தக்சன் (மாணவன் - கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கைதடியிலுள்ள அவரது மகளின் இல்லத்தில் இன்று (08.12.2023) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுநூலக வீதி,
கைதடி தெற்கு, கைதடி.

(CS 27095)(J-I)

தகவல்:
குடும்பத்தினர்
0703390931

# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
19 . 07 . 1929



மறைவு
08 . 11 . 2023

புங்குடுதீவு ஏழாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும்,
தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட
எமது குடும்பத்தலைவி

## பொன்னையா அன்னபூரணம்
## (கண்ணம்மா)

அவர்கள் கடந்த (08.11.2023) அன்று இறைபதமடைந்தார். அன்னாரது 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (08.12.2023) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நிலையில்லா உலகில்
நிதம் நிதம் நாமிங்கே
நிழலாய் தொடரும் உங்கள்
நீங்கா நினைவுகளுடன்....

தாவடி சந்தி.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா கனகராயன்குளம் மகாவித்தியாலயம் கணித விஞ்ஞானப் பிரிவு மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக இரட்டை வகுப்பறை திறப்பு விழா பாடசாலை அதிபர் செ.யேசுநேசன் தலைமையில் நடைபெற்றது. வவுனியா வடக்கு வலயக் கல்வி அபி விருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் லதாங்கி அம் பிகைபாகன் வகுப்பறையைத் திறந்து வைத்தார் (ரி-75)



மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களுக்கான புதிய துவிச்சக்கரவண்டிப் பாது காப்பு நிலையம் கடந்த வாரம் திறந்து வைக்கப்பட் டது. அமரர் விஸ்வநாதர் தியாகராஜா ஞாபகார்த்த மாக அவர்களது பிள்ளை களின் நன்கொடையில் இந்த துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டமை குறிப்பி டத்தக்கது. (ரி-75)

## சாதாரண தரப் பெறுபேறுகள்

முல்லைத்தீவு, டிசெ. 8

புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் சாதாரண தரப் பெறுபேறுகள். சுதாகரன் பிருந்தா 9ஏ,அன்ரன் பிலிப் தேவ அகல்யா 9ஏ,ராசலிங்கம் ஜதுர்சன் 8ஏ,பி,சற்குணம் சுயாதா 4ஏ,பி,4சி,அதிஸ்ரன் முல்லைச்செல்வி 3ஏ,4சி,பி,எஸ், கேதீஸ்வரன் கலைவாணி 3ஏ,பி,3சி,2எஸ் (ம)



## சாதனைப்பெண் பாராட்டு நிகழ்வு

முல்லைத்தீவு, .டிசெ. 8

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற மூத்தோருக்கான ஓட் டப்போட்டியில் இலங்கையிலிருந்து பங்கேற்று நாட் டுக்குப் பெருமைசேர்த்த முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி அகிலத்திருநாயகியை பாராட்டிக் கௌரவிக் கும் நிகழ்வு கரைதுறைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் தலைமை யில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ச-75)



மன்னார் மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராக (காணி) மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் நியமனம் பெற்றுள்ளார். மன்னார் பதில் மாவட்டச் செயலாளர் பரந்தாமன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மு.ப 11.30 மணிக்கு பதவியைப் பொறுப்பேற்றார். மன்னார் மாவட்ட மேலதிக மாவட்ட செயலராக (காணி) பதவியேற்றுள்ள மாணிக்கவாசகர் சிறிஸ்கந்தகுமார் இது வரைகாலமும் மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலாளராக கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ரி-213)

## விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக் கம் அதிகரித்துள்ள நிலையில் பொதுமக் கள் மத்தியில் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற் படுத்தும் நோக்கில் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி யாலய மாணவர்க ளால் விழிப்புணர்வு வீதி நாடகம் அச்சு வேலி பிரதான பேருந்துத் தரிப்பிட நிலையத்தடியில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து ஆவரங் கால் முன்பள்ளியிலும், அங்குள்ள சில பாடசா லைகளிலும் டெங்கு தொடர்பான விழிப்பு ணர்வு வீதி நாடகம் இடம்பெற்றது. (ரி-66)



## மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு

மன்னார், டிசெ.8

சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக மன்னார் ஆண்டான்குளம் பாடசாலையில் விசேட தேவையுடைய மாணவர்களின் பயிற்சி வள நிலையத்தில் 'மாற்றுத்திறனாளிகளுடனும் மாற்றுத் திறனாளிகளாலும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை மீட்டெடுக்கவும் அடையவுமான செயற்பாடுகளில் ஐக்கியமாதல்' என்ற தொனிப்பொருளில் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது. (ரி-60)



## துப்புரவுப்பணி

யாழ்ப்பாணம், டிசெ.8

உலக மண் தினத்தை முன்னிட்டு "டெங்குத் தொற்று அற்ற தூய தேசத்தைக் கட்டியெழுப்புவோம்" எனும் கருத்திட்டத்துக்கமைய புன்னாலைக்கட்டுவன் தெற் குச் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தி வரையான பலாலி வீதியில் டெங்கு நுளம்பின் பெருக்கத்துக்கு ஏதுவான பிளாஸ்ரிக், பொலித்தீன், போத்தல்கள், சிரட்டைகள் உள்ளிட்ட பொருள்கள் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் கழிவகற்றல் வாகனம் மூலம் கடந்த செவ்வாய்க்கிழமை அகற் றப்பட்டது.

இந்த நிகழ்வில் வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, உடுவில் பிரதேச செயலகம், புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலய மாணவர்கள், பலாலி இராணுவத் தினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து துப்புரவுப் பணிகளில் ஈடுபட்டனர். (ரி-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித் பிரேமதாஸவின் கல்வித்தகைமை என்ன?

## காமினி நாடாளுமன்றில் கேள்வி



கொழும்பு, டிசெ. 8
எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தனது கல்வித்தகைமையை நாடாளுமன்றத்தில் நிரூபிக்கவேண்டுமென பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே வலியுறுத்தியுள்ளார்.
எதிர்க்கட்சித் தலைவர் இந்த சபையில் தான் தான் ஒரேயொரு படித்த நபர் என்பதுபோல் மற்ற அனைவரையும் இழிவுபடுத்துகிறார். ஒருகாலத்தில் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்த சஜித் பிரேமதாஸவின் தந்தையை விட, சபையில் உள்ள அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதிக கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ளனர் என்பது எனக்குத் தெரியும் எனவும் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார். (அ-ம-6)

சாதாரணதரப் பெறுபேறு

# வலிகாமம் வலயத்தில் மகாஜன முதலிடம்!

யாழ்ப்பாணம், டிசெ. 8
அண்மையில் வெளியான சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில், வலிகாமம் வலயத்தில் யாழ்ப்பாணம் மகாஜனக் கல்லூரி முதலிடம் பிடித்துள்ளது.
வலிகாமத்தின் அதி உச்ச சித்தி வீதமாக 93.05 இனை மகாஜனக் கல்லூரி பெற்றுள்ளது. இந்தப் பாடசாலையில் இருந்து 187 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி அவர்களில் 174 மாணவர்கள் உயர்தரத்துக்குத் தகுதி பெற்றுள்ளனர். 3 மாணவர்கள் ஒரு பாட நிலுவையுடன் உயர்கல்வியைத் தொடரவுள்ளனர். (அ-ம)

# நோயாளர்கள் நலன்பேண அமைப்பொன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், நவ. 8
நோயாளர்களின் உரிமைகள், நலன்பேணலைக் கருத்திற்கொண்டு யாழ்ப்பாணத்தில் நாளைய தினம் அமைப்பொன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.
இதற்கான புதிய நிர்வாகக்குழுத் தெரிவும், அங்குரார்ப்பணமும் யாழ். நாச்சிமார் கோவில் பகுதியில் உள்ள தனியார் மண்டபமொன்றில் நாளை பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறவுள்ளது. (அ-ம-66)

## தீர்வு...

பலஸ்தீன மக்களுக்கு ஆதரவு வழங்கும் விதமாக, 'அடையாளச் சால்வை' அணிந்து நேற்றைய அமர்வில் சஜித் கலந்துகொண்டார். இதன்போது உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:-
வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் இந்த நாளில் தூக்கமில்லாமல் வேலை செய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. நாட்டிலிருந்து சொத்துகள் திருடப்பட்டு வெளிநாடுகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளன. நாட்டின் நிதி வளங்களைத் திருடிய தரப்பினரையும், வளங்களையும் கண்டுபிடித்து அந்த வளங்களை மீண்டும் நாட்டுக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டத்தில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தூக்கமில்லாமல் செயற்படுவதே மிகவும் பொருத்தமானது. நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி நாட்டை வங்குரோத்தாக்கிய தரப்பினர் யார் என்பதை இலங்கை உயர் நீதிமன்றம் வெளிப்படுத்தியுள்ளது. இந்தத் தீர்ப்புக்கு இணங்க நாட்டிலிருந்து திருடப்பட்ட வளங்களையும் பணத்தையும் திரும்பக் கொண்டுவருவதற்கான பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.
அத்துடன், மனித உரிமைகளைப் பாதுகாப்பது குறித்துப் பேசும் தற்போதைய அரசாங்கம், கொரோனா கால கட்டத்தில் இந்த நாட்டில் உள்ள இஸ்லாமிய சமூகத்தின் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறி தகனமா? அடக்கமா? என்ற பிரச்சினையைக் கிளப்பியது. இப்பிரச்சினையில் தலையிட்டால் சிங்கள - பௌத்த வாக்குகள் பறிபோகும் என்று கூறி இத்தகைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும், ஐக்கிய மக்கள் சக்தி அன்று அதை எதிர்த்தது.
இந்தப் பிரச்சினையில் நடந்து கொள்ள வேண்டிய முறையை உலக சுகாதார ஸ்தாபனம் தெளிவாகக் கூறியிருந்த போதிலும் அரசாங்கத்தின் முஸ்லிம் அமைச்சர்கள்கூட சரியான நிலைப்பாட்டில் இருக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே முஸ்லிம் மக்கள் மற்றும் இஸ்லாமிய சமூகத்தின் உரிமைகளுக்காக வீதிக்கு இறங்கியது. யார் என்ன சொன்னாலும் கோத்தாபய அன்று எடுத்த தீர்மானம் முற்றாக இனவாதத் தீர்மானமாகும். தற்போது அதனை அனைவரும் உணர்ந்துள்ளனர். பல்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்களுக்கு அவர்களின் மத தனித்துவம் பாதுகாக்கப்படவேண்டும்.
இந்த வருடம் வடக்கு - கிழக்கு பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கப்படும் என கடந்த வருடம் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், அந்தத் தீர்வுகள் இன்னும் கிடைக்கவில்லை. அந்தப் பிரச்சினை ஒரு சிக்கலானது. யார் ஆட்சியில் இருந்தாலும் உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்றாலும் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம், சிங்களச் சமூகங்களும் நாட்டின் ஏனைய பகுதி மக்களும் ஒன்றிணைந்து ஐக்கிய நாட்டில் இறையாண்மையுள்ள இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கு நாம் உழைக்கவேண்டும் - என்றார். (அ-ம)

## பலவீனமான...

முறைகளுக்கும் உட்படுத்தப்படாது விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்திய அரசாங்கத்தினது தலையீட்டின் அடிப்படையில் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.
ஆனால், இலங்கையில் உள்ள ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கமும் அமைச்சரவையும், வடக்கு கடற்றொழிலாளர்களது வளம் வெளிநாட்டு படகுகளாலே குறிப்பாக இழுவை மடிப் படகுகளால் அழிக்கப்படுவதைக் கண்டும் காணாதது போல் இருக்கின்றது. இது தொடர்பில் கடந்த 12 வருடங்களாக நாம் பல்வேறு வலியுறுத்தல்களை விடுத்து வருகின்றோம். ஆனால், எந்தப் பயனும் இல்லை.
முதலீட்டைக் கொண்டுவருகிறோம் டொலரைக் கொண்டு வருகிறோம் என்ற பெயரில் எங்களது வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பதிலேயே தீவிரம் காட்டிவருகின்றனர். இவ்வாறு நாட்டின் வளங்களை விற்று கிடைக்கும் அந்நியச் செலாவணியைவிட எங்களுடைய கடல் வளத்தைப் பாதுகாத்தால் அதனால் வரும் வருமானம் மிகமிக அதிகமாகும். 2024ஆம் ஆண்டிலாவது இது தொடர்பில் கனதியான பதிலொன்றை அரசாங்கம் வழங்கவேண்டும். அதுவே எங்களின் எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும் - என்றார். (அ-ம-100)

## கூட்டமைப்புக்குள்...

கூறிக்கொள்ள அவர் முற்படுகின்றார். கண்டியில்தான் கல்வி கற்றார். சிங்கள வீடுகளிலேயே உணவு உட்கொண்டார். சிங்கள நண்பர்களுடன்தான் பழகினார். சிங்களப் பெண்ணைத்தான் திருமணம் முடிக்கவும் போகின்றார். இப்படியானவர் தான்தன்னைப்புலியெனகூறிக்கொள்ள முற்படுகின்றார்.
கூட்டமைப்பில் உள்ள ஏனைய உறுப்பினர்களைப் புலிகள் எனக் கூறினாலும் பரவாயில்லை, அவர்கள் புலிகளுடன் இருந்தவர்கள். இவர் கண்டியில் தங்கி இருந்துவிட்டு, தற்போது புலி என்கிறார். கூட்டமைப்பில் உள்ள எம்.பி.க்களில் ஐவர் ஜனாதிபதியுடன்தான் இருக்கின்றனர். அடுத்த தேர்தலில் இவர்களுக்கு (கூட்டமைப்புக்கு) எதுவும் கிடைக்கப் போவதில்லை' - என்றார். (அ-ம-44)

## மாணவர்...

சைக்கிள்களில் வந்த மாணவர்கள் வாகனங்களை அதி வேகமாகச் செலுத்தி வீதியில் வித்தை காட்டியுள்ளனர். அப்போது பிறிதொரு மாணவனை ஏற்ற வந்த பெற்றோர் ஒருவர் விபத்துக்குள்ளானார். பெற்றோருக்கும், அங்கு நின்ற மாணவர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு, கைகலப்பு வரை சென்றுள்ளது. இதையடுத்தே பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. (அ-ம-18)

## வன்முறைக்குழு...

தாக்குதல் நடத்தியுள்ளது. வீட்டுக்குள் இருந்த பெறுமதியான பொருள்களும் அந்தக் குழுவால் கொள்ளையிடப்பட்டுள்ளன.
தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் தனது நண்பனுடன் மோட்டார்சைக்கிளில் வீடு நோக்கிச் சென்றபோது வெள்ளாம்போக்கட்டி சீலன் வீதிப் பகுதியில் வைத்து வழிமறித்த குழுவொன்றே அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இளைஞர் தப்பித்து அருகிலுள்ள வீடொன்றுக்குள் தஞ்சமடைந்த நிலையில், அந்த வீட்டுக்கு முன்பாகப் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராக்களையும் அந்தக் குழு அடித்துடைத்துள்ளது.
இதையடுத்தே இளைஞனின் வீட்டுக்குச் சென்று, குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி உள்ளிட்ட பெறுமதியான பொருள்களை அடித்துச் சேதப்படுத்தியுள்ளது. வீட்டில் வைக்கப்பட்டிருந்த 7 இலட்சம் ரூபா பணம் மற்றும் நகைகள் என்பனவும் அந்தக் குழுவால் கொள்ளையிடப்பட்டுள்ளன.
இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-27)


## யாழ்...

வினர்கள் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர். இதன்போதே அந்தப் பெண்கைதித்தன்னை சிறைக்காவலர்கள் தாக்குவதாக உறவினர்களிடம் சொல்லியழுதுள்ளார். இதனையடுத்தே மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
'அண்மையில் இளைஞர் ஒருவர் பொலிஸாரின் சித்திரவதையால் உயிரிழந்திருந்தார். அந்தச் சம்பவத்தின் பின்னரும் இவ்வாறு கைதிகளைத் தாக்கும் போக்கு மாறவில்லை" என்று குறித்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித்தனர். (அ-ச)

## பாலம்...

காலப்பகுதிக்குள்ளேயே பாலம் இடிந்து வீழ்ந்துள்ளமை மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. பாலத்தை உடன் சீரமைத்து, போக்குவரத்துக்கு வழியேற்படுத்தவேண்டும் என்று மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (அ-ம-27-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானத் தூதர்களாக தெற்கு இளைஞர்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 8

சர்வமதத் தலைவர்களின் ஆதரவுடன் நாடு முழுவதுமுள்ள 100 இளைஞர் அமைப்புகளால் சமாதானத்தின் செய்தியைத் தாங் கிய பயணம் தலதா மாளிகையிலிருந்து நல்லூர் வரை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இன முரண்பாடுகள், மதப் பிரச்சினைகள் காரணமாக துயரம் மற்றும் அநீதிக்கு உட்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டல், அரசியல் கலாசாரத்தின் ஊடாக இனவாதம் மதவாதத்தை ஒழித்தல், வர்த்தக நோக்கத்துக்காக மதவாதத்தை ஏற்படுத்தலைத் தடுத்தல் மற்றும் தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பப் பொதுத் தளமொன்றைக் கட்டியெழுப்பல் ஆகிய கோரிக்கைகளைத் தாங்கி சமாதானச் செய்தி எடுத்துவரப்பட்டுள்ளது.

பயணத்தின்போது ஒவ்வோர் இடங்களிலுமுள்ள மதத் தலைவர்களுடன் சந்திப்பு மேற்கொள்ளப்பட்டு ஆசீர்வாதம் மற்றும் ஆதரவு பெறப்பட்டது.

இறுதியில் யாழ்ப்பாணம் வந்தடைந்து நல்லூர் ஆலயத்தில் இந்தப் பயணம் நிறைவுற்றது. (ச)


## பெண் வேலையாள் தேவை

வீட்டு வேலை பார்ப்பதற்கும் 3 வயது குழந்தையை பராமரிப்பதற்கும், தங்கி நின்று அல்லது போய்வரக் கூடிய வேலையாள் தேவை. (சம்பளம் 30.000 - பேசித்தீர்மானிக்கலாம்)

077 078 4411, 077 659 3951

## காணி விற்பனைக்கு

அல்லைப்பிட்டியில் 100 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
Mithiran Thirukeswaran

074 0022 219

## வீடு விற்பனைக்கு

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி வீதியில் அழகிய சொகுசு மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
Mithiran Thirukeswaran

074 0022 219

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் சுப்பர்மார்க்கட்டுக்கு வேலையாட்கள் தேவை.
**காசாளர்** - கணினி தெரிந்தவர்கள் (இருபாலாரும்)
**பொதி செய்பவர்கள்** - பெண்கள்
தொடர்பு: **077 355 1631/ 077 392 9835**
**T.T.R.Supermarket**
**85,87, Rakka Road, Jaffna.**

## பாவித்த கட்டுமான உபகரணங்கள் விற்பனைக்கு

இடம் : வவுனியா
பொருட்கள் : கொன்கிறிற் மிக்சர், கல் அறுக்கும் இயந்திரம், ரம்பிங் றம்மர், தூண்பெட்டி, ஸ்கபோல்டிங் Set, GI பைப், மரப்பலகைகள், மற்றும் சிறிய பொருட்கள் இயந்திரங்கள்.
தொடர்புகளுக்கு : 074 358 4434

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். K.K.S.வீதி, சுன்னாகம்

**BARATHY**
சித்தன்கேணி
[எமது மூன்று நிறுவனங்களிலும்]

யாழ். மாவட்டத்தின் முன்னணி ஆசிரியர்களின் சேவையில்

**A/L 2025**

கலை, வர்த்தகம்

புதிய பிரிவு நாளை ஆரம்பம்
09-12-2023 சனிக்கிழமை

| | |
|---|---|
| பொருளியல் | R.தர்ஷன் |
| கணக்கீடு | S.திருக்குமரன் |
| வணிகக்கல்வி | S.பிரதீபன் |
| I.C.T | R.சுதர்ஷன், T.தேவதர்சன், S.N.விது |
| தமிழ் | N.சத்தியவேந்தன் |
| இந்து நாகரிகம் | P.ஜோதீஸ்வரன், A.மேனன் |
| புவியியல் | P.S.குமரன் |
| அரசியல் | S.கோகுலன் |
| வரலாறு | K.சுதன் |
| ஊடகவியல் | N.கஜிதரன் |
| அளவையியல் | S.சயந்தன், N.ஜெயசுரேஸ், E.S.பவன் |
| இந்து சமயம் | S.முகுந்தன் |
| நாடகம் | P.கணேஷ் |
| சித்திரம் | S.சபேசன் |
| சங்கீதம் | S.குமுதினி |
| மனை. பொருளியல் | S.றஜிதா |

புதிய அனுமதிகளினை பெற்றுக்கொள்ளவும்

நேர அட்டவனை தொடர்புகளுக்கு:
யாழ்.நகர் - 077 220 9651
சுன்னாகம் - 075 916 0417
சித்தன்கேணி - 077 940 8682
மேலதிக தொடர்பு:077 376 3511


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 06 . 12 . 1941



மறைவு 23 . 10 . 2023

கடந்த 23.10.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் குலவிளக்கு

### அமரர் மனோகரன் அரியமலர்

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த (02.12.2023) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், சபிண்டீகரண கிரியைகள் (03.12.2023) ஞாயிற்றுக்கிழமை அன்னாரது இல்லத்திலும் இனிதாக நடைபெற்றது.

இன்றையதினம் **(08.12.2023) வெள்ளிக்கிழமை** மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**"கதிரமலைவாசம்"**
**புலோலி மேற்கு,**
**கிராமக்கோடு.**

குடும்பத்தினர்
077 381 8605


## காணி விற்பனைக்கு

நல்லூர் கோவிலில் இருந்து 2 km தூரத்தில் 04 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

**நிலப்பரப்பு**

- பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.

திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.

- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று.

பார்வையிடும் நேரம்:- காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389,077 986 5457

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 33 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

* 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
* **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
* 20 அடிப்பாதையுடன்
* சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
* யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
* நல்ல சூழல், குடியிருப்புகள் சூழவுள்ள காணி
* நன்னீர் ஊற்று நிலம்
* தரகர் தேவையில்லை.
* **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 071 173 3911
076 853 5022
076 213 7239

(CS 27307) A-1


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியின் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org